**அத்தனகல்ல பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 30 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அத்தனகல்ல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நன்கொடையாக சபைக்கு கிடைத்த ரூபா 494,500 பெறுமதியான பேலின் இயந்திரம் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெயங்கொட கடைகளை வாடகைக்கு வழங்கியதற்காக கிடைக்க வேண்டிய ரூபா 4,093,624 நிலுவை முற்பண மீதி கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது 02 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 264,220 தொகையான கடன்கொடுத்தோர் மீதி குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) சபையின் 03 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 575,295 மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட 02 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 23,286 தொகை என்பன கடன்கொடுத்தோர் கணக்கில் அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) 2017 இல் களகெடிஹேன சமூக சபைக் கட்டிடம் அமைந்துள்ள காணியைச் சுற்றி கம்பியடித்து வாயிற்கதவை பொருத்துதலின் இறுதிக் கொடுப்பனவு ரூபா 218,752 ஆக இருந்த போதிலும், ரூபா 112,827 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மூலதனச் செலவினம் ரூபா 105,925 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 15 செயற்திட்டங்களுக்காக ரூபா 5,235,187 தொகையான கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும், இந்த செயற்திட்டம் மீளாய்வாண்டின்

போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக கடன்கொடுத்தோர் மற்றும் மூலதனச் செலவினக் கணக்குகள் அப்பெறுமானத்தால் அதிகரித்திருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிலுவை வருமான மீதியில் 03 விடயங்களுக்குரிய கணக்கு மீதிகளுக்கும், பட்டோலைகளின் மீதிகளுக்குமிடையே ரூபா 18,859,347 தொகையன இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயற்திட்ட முன்மொழிவாக 2013 ஆம் ஆண்டின் போதும், 2015 ஆம் ஆண்டின் போதும் சமர்ப்பிக்கப்பட்ட 03 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக சபையினால் ரூபா 1,664,911 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்தப்பணம் அவ்வமைச்சிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 49,500 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

எகொடபொத்த உப அலுவலகத்திற்குரிய ரூபா 219,003,639 பெறுமதியான 234 காணி மற்றும் கட்டிடங்களுக்கான நிலையான சொத்துப் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 371 | 125,546 | 06 மாதங்கள் முதல் 05 வருட கால வீச்சிற்குரிய முற்பணத்தைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571(1) | - | ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் காலாவதியான சகல வைப்புக்கள் தொடர்பான பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 571(2) | 3,920,597 | 02 வருடங்களை விஞ்சிய வைப்பு மீதி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) | 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | - | ஆகக் குறைந்தது 05 வருடங்களுக்கு ஒரு தடவையாவது கடை வாடகையை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 53,964,007 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,568,027 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

சபை அதிகாரப்பிரதேசத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தக்கூடிய வருடாந்தம் முதிர்ச்சியடையும் 06 நிலையான வைப்புக்கள் மற்றும் ஆறு மாதங்களில் முதிர்ச்சியடையும் 02 நிலையான வைப்புக்கள் என்பவற்றில் ரூபா 21 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 18,909,000 | 35,427,575 | 30,751,450 | 26,372,753 | 18,151,000 | 18,308,551 | 19,817,026 | 21,696,628 |
| வாடகை | 14,916,000 | 17,373,089 | 18,325,021 | 6,392,095 | 9,160,000 | 17,114,512 | 18,743,140 | 7,344,028 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,012,000 | 292,410 | 311,410 | 202,958 | 934,000 | 1,546,550 | 1,550,550 | 221,957 |
| ஏனைய வருமானம் | 69,196,000 | 69,928,143 | 24,643,077 | 126,813,288 | 73,345,000 | 108,075,102 | 87,427,875 | 81,528,223 |

#### 2.3.2 ஆதனவரி

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 22,071,199 தொகையான நிலுவை ஆதனவரி மீதியில் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரை ரூபா 8,972,794 தொகை, 05 வருடம் முதல் 10 வருடம் வரை ரூபா

9,242,176 தொகை மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 3,856,229 தொகை என்பன உள்ளடங்கியிருந்ததுடன் இந்த நிலுவைகளை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 கடை வாடகை**

(அ) எகொடபத்த உப அலுவலகத்திற்குரிய 50 நடைபாதைக் கடைகள் செயற்திட்டத்தில் 06 கடைகளில் இருந்து அறவிடுவதற்குள்ள 10 வருடங்களை விட பழைய முன்னைய நிலுவை 2018 யூலை 31 இல் உள்ளவாறு ரூபா 134,651 தொகை, 48 கடை செயற்திட்டத்தில் 07 கடைகளில் இருந்து 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தைக் கடந்த முன்னைய நிலுவை மீதி ரூபா 883,682 தொகை மற்றும் வெயான்கொட பொதுச் சந்தை தொகுதியில் 27 கடைகளில் இருந்து 10 வருடங்களுக்கு மேல் காலம் கடந்த முன்னைய நிலுவை மீதி ரூபா 4,093,626 ஆகும்.

(ஆ) வெயான்கொட உப அலுவலகத்திற்குரிய பொதுச் சந்தையில் மூடப்பட்டுள்ள 21 கடைகளில் இருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடுவதற்குள்ள வாடகை ரூபா 588,795 ஆக இருந்ததுடன் திறக்கப்பட்டுள்ள 14 கடைகளில் இருந்து அறவிடுவதற்குள்ள வாடகை ரூபா 299,163 ஆகும்.

**2.3.4 ஏனைய வருமானம்**

**சுற்றாடல் அனுமதிப்பத்திரம்**

2017 ஆம் ஆண்டிற்குரிய அத்தனகல்ல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய வியாபாரங்களாக இனங்கண்டிருந்த வியாபாரங்களின் எண்ணிக்கை 177 ஆக இருந்த போதிலும், 2016 மற்றும் 2017 என்ற இரண்டு ஆண்டுகளின் போது 76 வியாபாரங்களுக்கு மாத்திரமே சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

**2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2018 யூலை 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 79,194,338 ஆகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உபவிதி**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் செயற்திட்டத்தின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதியொன்று விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 17 பணிகளுக்காக மாத்திரமே உபவிதி விதிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

விதிக்கப்பட்டிருந்த உப விதியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த 08 இலக்குகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

மீளாய்வாண்டிற்குரிய கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக செலவிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 48,762,491 ஆக இருந்ததுடன் அதில் உக்காத கழிவுப்பொருட்கள் அகற்றுதல் மேற்கொள்ளப்பட்ட வெயன்கொட தம்புவவத்த உரிமையாளருக்கு ரூபா 7,139,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், இறுதியாக அகற்றுவதற்கு அனுப்பப்பட்ட கழிவுப்பொருளின் அளவை அளவீடு செய்து உறுதிப்படுத்தாமல் காலத்தை அடிப்படையாகக்கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த கழிவுகள் கொண்டுபோடப்பட்ட இடத்திற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் காணப்படவில்லை.

**(ஈ) சுற்றாடல் பிரச்சினைகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை பொதுமக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட மரம் வெட்டுதல்களுக்குரிய 91 முறைப்பாடுகள் மற்றும் அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பான 30 முறைப்பாடுகள் என்பன காணப்பட்டதுடன் மரம் வெட்டுவதற்குரிய 06 முறைப்பாடுகள் தொடர்பாக மாத்திரமே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**(உ) அமுல்படுத்தப்படாத செயற்திட்டங்கள்**

பல்வேறு நிதிமூல ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட 522 செயற்திட்டங்களில் 18 செயற்திட்டங்கள் 2018 மே 31 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் விஷேட செயற்திட்டங்களின் கீழ் 08 செயற்திட்டங்கள் தொடர் வேலையாக்கப்பட்டிருந்தது.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 யூன் 14 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) களவாடப்பட்ட ரூபா 494,500 பெறுமதியான தண்ணீர் மோட்டார் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அந்த நட்ட இழப்புக்கள், நட்டம் தொடர்பான பதிவேட்டிலும் குறிப்பிடப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டுகளினதும் பொது வைப்புக்கள் கணக்கில் பதியப்படாமை மற்றும் கணக்குகள் சமப்படுத்தப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில்

காண்பிக்கப்பட்ட ரூபா 35,228,024 தொகையான நானாவித வைப்பு மீதியின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(இ) செயல்நிமித்த முற்பணம் தொடர்பான முற்பணம் பதிவேடொன்று பேணப்படாதிருந்ததுடன் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களும் கடன்பட்டோர் பதிவேட்டில் உள்ளடக்கப்பட'டமையால் கடன்பட்டோர் மீதியை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியாதிருந்தது.

(ஈ) விளம்பர அறிவித்தல்களுக்கு பணம் அறிவிடுவதற்காக பிரதேச சபையின் எந்தவொரு உப அலுவலகத்திலும் விளம்பர அறிவித்தல் பதிவேடு பேணப்படாதிருந்ததுடன், இதன் காரணமாக கொடுப்பனவு செய்யப்பட்ட விளம்பர அறிவித்தல் தொடர்பாக பௌதீக மெய்மையாய்வை மேற்கொண்டு இனங்காண்பதற்கு முடியாதிருந்தது.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### (அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை | மிகை ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| பதவி நிலைத் தரம் | 03 | 03 | - | - |
| மூன்றாம் நிலை | 06 | 06 | 01 | 01 |
| இரண்டாம் நிலை | 58 | 57 | 02 | 01 |
| ஆரம்ப நிலை | 165 | 186 | 01 | (25/2014)20 |
| மொத்தம் | 232 | 252 | 04 | 22 |

(i) 04 வருமானப் பரிசோதகர் பதவிகள் 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான கால வீச்சில் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இன் பிரகாரம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ள 20 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) ஊழியர் கடன்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிடப்படாது காணப்பட்ட நிலுவை கடன் மீதி ரூபா 1,088,601 ஆக இருந்ததுடன் 1990, 1993 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் இருந்தும், அதற்கு முன்னிருந்தும் கொண்டுவரப்படுகின்ற முன்னைய ஆண்டுகளின் நிலுவைக் கடன் மீதி இதற்கிடையே இருந்தது. பணியிடமாற்றம் மற்றும் ஓய்வுபெற்றுச் செல்லல் போன்ற காரணங்களின் அடிப்படையில் அறவிடப்படாது காணப்படுகின்ற இந்த ஊழியர் கடன், மரணப் பணிக்கொடை, ஓய்வூதியப்

பணிக்கொடை என்பவற்றை பிணையாளரிடமிருந்தேனும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உரிய கடன் கோவைகள், அறவிடல் கட்டளைத் திகதி மற்றும் பிணையாளர்களின் விபரம் போன்ற முக்கியமான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 3.4 செயற்பாட்டு செயற்றறினின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட நிர்மாணத் திட்டங்களின் எண்ணிக்கை 198 ஆக இருந்ததுடன் தரச்சான்றிதழ்கள் 05 இற்காக மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணிகள் கூறிடப்பட்டு விற்பனை செய்யப்படும் சந்தர்ப்பமொன்றில் அந்தக் காணி விற்பனையிலிருந்து கிடைத்த பணத்தில் 1 சதவீதத்திற்குச் சமமான வரியொன்று அறவிட வேண்டியிருந்த போதிலும், சபையின் உத்தியோகத்தரின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு அந்த வரித்தொகை அறவிடப்பட்டிருந்தது.

(இ) 2008 ஆம் ஆண்டில் நிட்டம்புவ நகரத்தில் நிர்மாணிக்கப்பட்ட 48 கடைகள் செயற்திட்டத்திற்குரிய 20 கடைகள் அளவில் வாடகை உரிமையாளரினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் 10 வருடங்கள் அளவிலான காலமாக மூடி வைக்கப்பட்டிருந்தது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

மீளாய்வாண்டின் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் தொலைந்து போயிருந்த ரூபா 166,270 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் மற்றும் 2016 ஆம் ஆண்டின் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் தொலைந்துபோயிருந்த ரூபா 30,069 தொகையான நூலகப் புத்தகங்கள் என்பன தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 3,205,221 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் உரித்துறுதி மூலம் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.3 விளைவற்ற சொத்துக்கள்

பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாத ரூபா 752,561 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்காக பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 ஒப்பந்த நிர்வாகம்

(அ) நேரடி ஒப்பந்த கையளித்தல் முறைமையின் கீழ் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு நிர்மாண ஒப்பந்தங்களை கையளிக்கும் போது 2012 சனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்தகாரருடன் செயற்திட்டங்களுக்குரிய உடன்படிக்கைகளில் கையொப்பமிடும் போது திகதி மற்றும் விபரங்களை உள்ளடக்கி முறையானதாக உடன்படிக்கையில்

கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. 2017 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை செய்யப்பட்ட 02 செயற்திட்டங்களின் வேலைகள் 2018 ஏப்ரல் 10 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அத்திகதியில் உடன்படிக்கை செய்யப்பட்ட காலமும் விஞ்சியிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

06 செலவின விடயங்களுக்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 10,825,000 தொகை முழுமையாக சேமிக்கப்பட்டிருந்ததுடன், 06 செலவின விடயங்களுக்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட அளவில் 12 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான அளவில் சேமிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | | கணக்குப் புத்தகங்களும், பதிவேடுகளும் நாளதுவரையாகப் பேணப்படாமை. |
| (ஆ) | சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள் | (i) | பௌதீக ரீதியில் காணப்படாத சொத்துக்கள் கணக்குகளில் அகற்றப்படாமை |
| | | (ii) | சொத்துக்களுக்குரிய உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உரித்துறுதி மற்றும் கையளித்தல் கட்டளை பெறப்படாமை. |
| (இ) | ஊழியர் முகாமைத்துவம் | (i) | பதவியணியினர் முறைமைப்படுத்தப்படாமை. |
| | | (ii) | வெற்றிடங்கள் நிரப்பப்படாமை |
| (ஈ) | ஒப்பந்த நிர்வாகம் | (i) | முறையான பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்படாமை |
| | | (ii) | உடன்படிக்கை முறையாகத் தயாரிக்கப்படாமை. |
| (உ) | வருமான நிர்வாகம் | (i) | ஆதனவரி மற்றும் கடை வாடகை மதிப்பீடு செய்யப்படாமை |
| | | (ii) | நிலுவை வருமானம் அதிகரிக்கின்றமை |
| | | (iii) | குறைவாகப் பயன்படுத்தப்பட்ட கடைகளை மீள கேள்வி கோரி வழங்காமை |
| | | (iv) | ஆதனவரி வீதம் திருத்தம் செய்யப்படாமை. |